நாள்.09.04.2026
அசல் வழக்கு எண். 226/2022
வா. சா.1
பெயர். ஐயாப்பிள்ளை
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

என்னுடைய தகப்பனாருக்கு சொந்த ஊர் வேப்பிலாங்குளம் என்றால் சரிதான். நான் அங்கு தான் பிறந்து வளர்ந்தேன் என்றால் சரிதான். என்னுடைய தந்தைக்கு பாத்தியப்பட்ட வீடு சர்வே எண் 365 இருந்தது என்றால் சரிதான், சர்வே எண் 365/16 ஆகும். சர்வே எண் 365/16 தற்போது 365/17 ஆக உட்பிரிவாகி உள்ளது என்றால் சரிதான், ஆனால் பழைய வீடு சர்வே எண் 365/16 ல் தான் இருந்தது. சர்வே எண் 365/16 ல் உள்ள வீட்டிற்கு வடக்கு எல்கை சர்வே எண் 365/17 உள்ள வீடு என்றால் சரிதான். சர்வே எண் 365/17 உள்ள வீடு என்னுடையது என்றால் சரிதான்.

சர்வே எண் 365/16 க்கு கீழ்ப்பக்கம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். தென்புறம் கோவில் நிலம் என்றால் சரிதான். அதன் சர்வே எண் 365/15 என்றால் சரிதான். சர்வே எண் 365/16 க்கு மேற்புறம் பாதை உள்ளது என்றால் சரியல்ல, பாதை இல்லை. மேற்புறம் உள்ளது சர்வே எண் 365/14 என்றால் சரிதான் , அது வேறு நபரின் இடம். என்னுடைய சகோதரரான வேலார் என்பவர் 19.09.2013 ம் தேதி பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் எண் 2185/2013 என்றால் சரிதான்.

நான் மேற்படி கிரைய ஆவணம் என்னை கட்டுப்படுத்தாது என அசல் வழக்கு எண் 105/2013 என்னுடைய சகோதரர் மற்றும் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தை வாதி தரப்பு ஆவணமாக அந்த வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 105/2013 தாக்கல் செய்த காலத்தில் மேற்படி கிரைய ஆவணத்தின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் கண்ட சொத்தின் எல்கையாக வடக்கு பக்கம் ஐயாப்பிள்ளை வீடு , தெற்கு பக்கம் சுடலைகோவில், கிழக்கு பிரதிவாதி இடம், மேற்கு நான்கு அடி தென்வடல் பொதுபாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சர்வே எண் 365/17 க்கு வடக்கு பக்கம் 364 என்றால் சரியல்ல, தெரு உள்ளது. தெருவின் சர்வே எண் என்னவென்று எனக்கு தெரியாது. மேற்கு பக்கம் சர்வே எண் 365/11, 12 உள்ளது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் சர்வே எண் 365/1 பி உள்ளது என்றால் எனக்கு

தெரியாது. தெற்கு பக்கம் சர்வே எண் 365/16 உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது சகோதரர் வேலான் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணத்தை பற்றி ஆட்சேபனை எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். முந்தைய வழக்கிலும் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கில் எனது சகோதரர் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணத்தில் கண்ட எல்கைக்கு உட்பட்ட சொத்தில் தான் ஆக்கிரமிப்பு செய்ததாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல, சர்வே எண் 365/17 ல் முன்பு இருந்த அதே வீடு தான் தற்போதும் உள்ளது அது என்னுடைய வீடு. நான் எனது வழக்குரையில் தபசில் சொத்தையும்அதன் வடபுறம் உள்ள இடத்தையும் சேர்த்து அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், வடபுறம் என்னுடைய வீடும், தென்புறம் என்னுடைய பட்டா இடமும் உள்ளது.

இரண்டு இடத்தின் விஸ்தீரணங்கள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் ஆக்கிரமிப்பு எந்த பக்கம் உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 365/16 உட்பிரிவு ஆகுவதற்கு முன்பு எனது பெயரில் பட்டா கிடையாது என்றால் சரியல்ல, பட்டா உள்ளது. பட்டா விவரங்கள் எதுவும் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பட்டா தவறுதலின் காரணமாக தான் என்னுடைய சகோதரர் எனது மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு என்னுடைய சகோதரர் எனது தந்தையின் இறப்பிற்கு பிறகு வட பக்கம் எனக்கும், தென்பக்கம் அவருக்கும் ஒதுக்கப்பட்டதாக கூறி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

பட்டா தவறுதலாக தென்பக்கம் எனது பெயருக்கும், வடபக்கம் எனது சகோதரர் பெயருக்கும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா தவறுதலின் காரணமாக தான் இவ்வழக்கு பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பட்டா உண்மையானது. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாகப்பிரிவினை செய்துள்ளோமா என்றால் செய்யவில்லை, நான் ஒரு வயலிலும் எனது சகோதரர் ஒரு வயலிலும் பயிர் செய்கிறோம். அதே போல் தான் என் தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் வடபுறம் நானும், தென்புறம் எனது சகோதரரும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரர் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணத்தின் படி பிரதிவாதி அனுபவம்

செய்து வரும் நிலையில் சட்டம் கூறும் காலத்திற்கு பிறகு இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.